**செய்தி வெளியீடு எண்: 677** **நாள்: 19.09.2018**

இன்று (19.09.2018) சென்னை, அண்ணா நகர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பொது விநியோக திட்டக்கிடங்கில் மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் **திரு. இரா. காமராஜ்** அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

அரிசி, சர்க்கரை, துவரம் பருப்பு, பாமாயில் ஆகிய அத்தியாவசியப் பொருள்கள் செப்டம்பர் மாத ஒதுக்கீட்டின்படி நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டது. அனைத்து பொருள்களும் உரிய தரத்துடன், சரியான எடையில் இயக்க பொறுப்பாளர்கள் முன்னிலையில் நகர்வு செய்யப்பட வேண்டுமென கிடங்கு அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்.

கிடங்குகளில் தானிய சேமிப்பு இழப்புகளைக் குறைப்பதற்கும், சுமை தூக்கும் தொழிலாளர்களின் பணிச்சுமையை குறைப்பதற்கும், மூட்டைகளை ஏற்றி, இறக்கி அட்டியிடும் இயந்திரம், தானியங்கி இழுவை இயந்திரம், ஜெனரேட்டர்கள், சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் ஆகியவை பொருத்தவும், GPS கருவிகள் மூலம் லாரிகளின் இயக்கத்தை நவீனக் கட்டுப்பாட்டு அறை அமைத்து கண்காணிக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அண்ணாநகர் அமுதம் பல்பொருள் சிறப்பங்காடியில் ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் அவர்கள், பொது மக்களுக்கு தரமான அரிசி, அனைத்து மளிகைப் பொருள்கள், மற்றுமுள்ள அத்தியாவசியப் பொருள்கள் குறைவான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் தெரிவித்தார். அப்போது அங்காடியில் பொதுமக்களிடம் உரையாடிய அமைச்சர் அவர்கள், நுகர்வோர் தேவைக்கேற்ப பொருள்களைக் கொள்முதல் செய்து, விற்பனை செய்யவேண்டுமென்று மண்டல அலுவலர்களை அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திருமதி. எம். சுதாதேவி, இ.ஆ.ப., உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திருமதி. சோ. மதுமதி, இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**